**தொடன்கொட பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 17 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 16 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு பண்டங்களையும் சேவைகளையும் பெறாதபோதும், நானாவித செலவின விடயங்களில் வரவு வைத்தவாறு ரூபா 1,820,858 கூட்டுத் தொகை கடன் கொடுத்தோரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 நவெம்பர் 09 ஆந் திகதியன்று இலங்கை வங்கியில் பெறப்பட்ட ரூபா 5,000,000 பெறுமதியான நிலையான வைப்பிற்குப் பெற வேண்டிய ரூபா 70,479 வட்டியானது நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 163,707 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் ரூபா 185,900 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் மூலதனமாக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------------------

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,859,798 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 96,529,945 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,973,147 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 2. வருவாய் நிர்வாகம்

-----------------------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- | --- |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,767 | 2,940 | 3,633 |
| (ii) | குத்தகை வாடகை | 682 | 581 | 100 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 138 | 138 | - |

**2.2 தீர்வை வரி**

---------------------

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 4,592,264 தீர்வை வரி நிலுவையில் ஆண்டின்போது 40 சதவீதமான ரூபா 1,834,321 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் தீர்வை வரிக்கெனப் பட்டியலிடப்பட்ட வருவாய் ரூபா 2,298,166 ஆகும். இதில் 65 சதவீதமான ரூபா 1,487,330 அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வை வரி மீதி ரூபா 3,568,370 ஆகும். அதில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாகிய ரூபா 379,707 , 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாகிய ரூபா 1,639,148 , 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாகிய ரூபா 1,073,032 என்பன அடங்கியிருந்தன. இதற்கமைய, தீர்வை வரி நிலுவையை அறவிடுவதில் நலிவு நிலவியது.

**2.2.3 பிரசார விளம்பர வருவாய்**

---------------------------------------------------

(அ) 2015 டிசெம்பர் 28 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1947/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் உள்ள பிரசார விளம்பரங்கள் தொடர்பான உப விதியின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசார விளம்பரங்களுக்குரிய கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், பிரசார விளம்பரங்களின் பொருட்டு உப விதிகள் தயாரிக்கப்பட்டு அவற்றை அங்கீகரித்து அதன் பிரகாரம் கட்டணம் அறவிடப்படவில்லை.

(ஆ) 2016 நவெம்பர் 02 ஆந் திகதியன்று சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட சபுகஹவத்த, திக்ஹேன, பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகே பன்சல சந்தி மற்றும் துடுகல சந்தி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின்போது அங்கு பொருத்தப்பட்டிருந்த பல்வேறு அளவுகளிலான 83 பிரசார விளம்பரப் பலகைகள் மூலம் சபை பெறக் கூடியதாக இருந்த ரூபா 140,102 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை எனத் தெரியவந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 16,387,258 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 12,506,302 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) சபைக்குரிய பொது வசதிகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளிலும் மயானங்களிலும் அத்துமீறி வசிப்பவர்களையும், காணிகளை அத்துமீறிக் கைப்பற்றியிருப்போரையும் அகற்றி சபைக்குரிய காணிகளது உரித்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

(ஆ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய 25 வேலைகளை சுற்றாடல் அதிகாரசபை இனங்கண்டு அறிவித்திருந்தபோதும், அண்மைய 4 ஆண்டுகளில் அவற்றுள் 05 வேலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(இ) சுகாதாரப் பரிசோதகர்களால் உணவு மற்றும் ஔடதங்களுக்கான ஏற்பாட்டு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு மாறாக பிரதேச சபையின் எல்லைக்குள் உணவு வழங்கும் நிலையங்கள் சுற்றிவளைக்கப்படுவதற்கென முற்பணத்தைப் பெற்று, பின்னர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வழக்குகளும் தொடரப்பட்டு, கட்டணம் அறவிடப்பட்டிருந்தபோதும், அவற்றைச் சபையில் அறிக்கையிடாததுடன், வழக்குத் தொடரப்பட்டமையால் பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் பொருத்தப்பட்டுள்ள 07 தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்குச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) 1992 செப்டம்பர் 30 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரது அபிவிருத்திப் பிரமாணச் சுற்றறிக்கையின் 6 ஆம் இலக்கினது 2.1 ஆம் பந்தி மற்றும் 1986 மார்ச் 10 ஆந் திகதிய அதே அதிகார சபையினது 393/9 ஆம் இலக்க வர்த்தமானிக் கட்டளை 22(i) என்பவற்றின் பிரகாரம் பிரிவுகளாக்கப்படுவதற்கு எண்ணப்படும் காணித் துண்டோ அல்லது காணியானது ஒரு ஹெக்டயாருக்கு அதிகமாகும் சந்தர்ப்பத்தில், வீதிக்கான பாதையைத் தவிர்த்து, எஞ்சும் காணியினது 10 சதவிதத்திற்குக் குறையாத காணி சமுதாய மற்றும் விநோத நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான இடத்தில் ஒதுக்கப்பட வேண்டும். எனினும், அவ்வாறு ஒதுக்கப்படும் இடத்தை ஒப்படைப்பு உரித்துறுதியின் மூலம் சபை சுவீகரித்திருக்கவில்லை. கடந்த பல ஆண்டுகளின்போது காணி ஏல விற்பனையாகியமை தொடர்பான கோவைகள், பதிவேடுகள், உரித்தை வழங்கும் உரித்துறுதிகள் தொடர்பாக 2015 செப்டம்பர் 25 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடித் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஏழு காணிப் பிரிவுபடுத்தல்களின்போதும் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட முறையே 18.2, 67.5, 169.75, 127.5, 146, 64.4 பர்ச்சஸ் காணிப் பிரிவுகளது உரித்துறுதிகளைப் பெறுவதற்குச் சபை 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதியளவிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) பொது வசதிகளுக்கென சபைக்கு வழங்கப்பட்ட கஜுகஹவத்த கொட்டயாஹேன மற்றும் பெட்டிகலவத்த என்பவற்றினது 126.5 பார்ச்சஸ் மற்றும் 67.5 பர்ச்சஸ் தொடர்பாக 2015 செப்டம்பர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது அக்காணிகளது வரம்பை நிர்ணயிக்கக் கூடியவாறான அடையாளமிடப்பட்ட எல்லைகள் நிச்சயப்படுத்தப்பட்டிராததுடன், அவை சபைக்குரிய காணியென இனங்காணக்கூடியவாறான பெயர்ப் பலகைகள் பொருத்தப்படாதிருந்தமையும் தென்பட்டது.

(iii) நில அளவை இலக்கங்கள் 3612005 முற்றும் 3622005 என்பவற்றின் மூலம் பிரிவுபடுத்தப்படுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்த கந்தனகொட கெலே காணியின் அளவு 602.3 பார்ச்சஸ் ஆதலால் அதில் 10 சதவீதமான 60.23 பார்ச்சஸ் காணி சபைக்கு வழங்கப்பட

வேண்டியபோதும், 44 பர்ச்சஸ் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. சபைக்கு வழங்கப்பட்ட 1 சதவீத வரியுடன் ஒப்பிடுகையில் சபைக்குக் குறைவான வழங்கப்பட்ட காணியின் அளவு 16.23 பர்ச்சஸ் ஆகியதுடன் அதனது பெறுமதி ரூபா 292,140 ஆகவுமிருந்தது.

**3.2 போதிய அதிகாரத்தால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

முறையான அதிகாரமின்றி, பட்டோலையில் காணப்பட்டபோதும், நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படாத நானாவித வைப்பாகிய ரூபா 630,476 சபையால் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

வீதியின் மொத்த நீளம் 75.2 மீட்டரானபோதும் 49.32 மீட்டர் வரை வீதியைக் கொங்கிரீட் இட்டு அதன் பின்னர் மதகு ஒன்றை அமைப்பதற்காக வீதியில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர், எஞ்சிய 30.88 மீட்டருக்கும் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. ஒப்பந்தச் சங்கம் 2015 யூன் 30 ஆந் திகதியளவில் வேலையை நிறைவேற்றியிருந்தபோதும், நிர்மாணிக்கவிருந்த மதகு 2017 ஆகஸ்ட் 28 அந் திகதியளவிலும் நிர்மாணிக்கப்படாதிருந்தது.

**3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

தொடன்கொட பிரதேச சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையிடம் கழிவுப் பொருளை அப்புறப்படுத்தவதற்கான இடமொன்று இல்லாதிருந்ததுடன் காணி உரிமையாளர்களின் வாய் மூல அனுமதியுடன் குறித்த ஓரிடத்தில் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு அப்புறப்படுத்தலுக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராததுடன், அவ்வாறான செய்கையால் அருகே அமைந்த இடங்கள் சுற்றாடல் பாதிப்புக்குள்ளாகியுமிருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீடு